## லங்கா லேலான்ட் (பிறைவேட்) லிமிட்டட்– 2016/2017

---

லங்கா லேலான்ட் (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

2017 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 விடயத்தின் மீதான அழுத்தம்

எனது கணக்காய்வு அபிப்பிராயத்தை முனைப்பழியுள்ளதாக்காமல் தற்போது கம்பனியின் உரித்தாக இல்லாத ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள இறையில் காணியை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்கான 04 ஆம் இலக்கக் குறிப்பின் மீது எனது கவனத்தைச் செலுத்தியுள்ளேன்.

### 2.1.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனி நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

### 2.1.3 ஏனைய விடயம்

2016 மார்ச் 31 இல் முடிவடைந்த காலப்பகுதியில் உள்ளபடியான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் காசு அடிப்படையில் வட்டி வருமானத்தை இனங்கண்டமை காரணமாக 2016 ஆகஸ்ட் 04 இல் அந்த நிதிக்கூற்றுக்களின் மீது மாற்றஞ்செய்யப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயமொன்றை வழங்கிய மற்றுமொரு கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

REPO முதலீட்டின் மீதான ரூபா 48,776 தொகையான வட்டி வருமானம் மீளாய்வாண்டிற்கு கம்பனியினால் அட்டுறு செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கு எதிராக சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| வகை | | தொகை | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | காணிக்கான வாடகை செலுத்துகை | 10,000 | வாடகை உடன்படிக்கை |
| (ஆ) | சபைக் கூட்டச் செலவினங்கள் | 130,000 | செலுத்துகை உறுதிச்சீட்டுக்கள் |
| (இ) | எரிபொருள் செலவின மீளளிப்புக்கள் | - | ஓட்ட அட்டவணைகள் |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

2016 திசெம்பர் தொடக்கம் 2017 மார்ச் வரையான காலப்பகுதிக்கு 2006 இன் 10 ஆம் இலக்க உழைக்கும்போதே செலுத்தும் வரி அதிகாரச்சட்டத்தின் 117 ஆம் பிரிவின் பிரகாரம் விகிதங்களினை பிரயோகிக்காமை காரணமாக தலைவரின் படிகளுடன் தொடர்புடைய உழைக்கும்போதே செலுத்தும் வரி ரூபா 34,500 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

**3. பாதீட்டுக் கட்டுப்பாடு**

கம்பனி ஆண்டிற்கு வியாபாரத்திட்டம் / பாதீடொன்றினை தயாரித்திருக்கவில்லை.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் காலத்திற்கு காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்பு | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) கடமைப் பகிர்வு | i. | முறையானதொரு அங்கீகார செயன்முறையின்றி நிதிக் கட்டுப்பாட்டாளரினால் வங்கி இணக்கங்கள் மற்றும் நாளேட்டுப் பதிவுகள் தயாரிக்கப்பட்டு பதிவிடப்படுகின்றன. |
| | ii. | நாளேட்டுப் பதிவுகளின் பதிவேடு பேணப்படாமை மற்றும் முறைமை மூலம் உருவாக்கப்பட்ட நாளேட்டுப் பதிவேடுகள் மாத்திரம் காணப்படுகின்றமை. |
| (ஆ) மனித வளங்கள் முகாமைத்துவம் | | மனித வளங்கள் மீது எவ்விம ஆவணரீதியான கொள்கையும் காணப்படாமை மற்றும் எவ்வித தனிநபர் கோவை ஆவணப்படுத்தல் முறைமையும் பேணப்படாமை. |